AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 7

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.



ஆன்மீக விஞ்ஞான இதழ்

மாதம் இரு முறை வெளிவரும்

## கால பைரவ அஷ்டமி

- டிசம்பர் மாத ராசிபலன்கள்
- அரிய ஆன்மிக தகவல்
- சித்தர் பூமி
- யந்திரமும் மந்திரமும்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 95004 95008, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



நமது தெய்வங்களைத் துதிக்கும் ஒவ்வொரு மந்திரங்களுக்கும் பிரத்தியேகமான சக்தி உண்டு "ஓம் துர்க்காயே நமஹ" என்று மந்திரம் சொல்லி, துர்க்கையை வணங்கும் போது நம்மைச்சுற்றிலும் உள்ள எதிர்மறை எண்ணங்களும் எதிர்மறையான செயல்களும் தானே விலகுவதை உணரலாம், அதேபோல நரசிம்மசுவாமிகளின் மந்திரத்தை தொடர்ந்து பாராயணம் செய்யும் போது, நம்மை நெருங்கி வரும் தீய சக்திகள் அனைத்தும் சூரியனைக்கண்ட பனிபோல் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைவது உறுதி? எனவே, இறை சிந்தனையோடு மந்திரங்களை பாராயணம் செய்து, இன்னல்களிலிருந்து விடுபடுவோம்.

~ Dr. Baskaran Pillai



இனிய ஆன்மிக சத்வித்யா நேயர்களே கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தவாறு கார்த்திகை மாதத்தின் மாபெரும் நிகழ்வான தீபத்திருவிழா, அதற்கு முன்பாக கந்தசஷ்டி போன்ற ஆன்மிக நிகழ்வுகள் இனிதே நிகழ்ந்து மக்களின் மனங்களில் ஓர் தெளிவினை புகுத்தியுள்ளது. கிரக சஞ்சாரங்களில் குருப்பெயர்ச்சியும் நடந்து, ஏங்கிக்கிடந்த நெஞ்சங்களுக்கு ஏற்றத்தையும் மாற்றத்தையும் வழங்கியுள்ளது.



உலகையே அச்சுறுத்தி வந்த அரக்கநோய் நம் தமிழ் நிலத்தைப் பொறுத்தவரையில் மெல்ல, கட்டுக்குள் வந்துகொண்டிருக்கிறது, இதுவே மக்களின் மனதில் ஓரளவு நிம்மதியைத் தந்துள்ளது இனி, வாழ்க்கைப் பயணத்தில் முடக்கமே இல்லை வெற்றிக்கோட்டை தொட்டுவிட, குதிரைபோல இறக்கை கட்டிப் பயணிப்போம்

அவரவர் தங்கள் கிரகநிலைகளை அறிந்து, தடைகளைக் கடந்து வெற்றிபெற எங்கள் Astrovedன் ஜோதிட, பரிகார சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

அன்புடன்

(அச்சிட்டு வெளியிடுவோர்) ஆஸ்ட்ரோவேட்.காம்

# ஸ்ரீமூல ராமர் வரலாறு

பிரம்மதேவர் தன் வழிபாட்டிற்காக பகவானை விக்கிரகமாகச்செய்து வழிபட்டு வந்தார். அவர் வழிபட்ட விக்கிரகம் பின்னாளில் இக்ஷ்வாகு மன்னருக்கு அளிக்கப்பட்டது. வழி வழியாகப் பூஜிக்கப்பட்டு வந்த அந்த விக்கிரகத்தைத் தசரத மன்னரும் பிள்ளைப் பேறுக்காக மிகுந்த பயபக்தியுடன் பூஜித்து வந்தார், ஸ்ரீராமர் அவதரித்தார். ஸ்ரீராமர் அவதரிக்கக்காரணமான அந்த விக்கிரகம் "ஸ்ரீ மூலராமர்" என அழைக்கப்பட்டது.



ஸ்ரீராமர் பரம்பரையால் வழிவழியாகப் பூஜிக்கப்பட்ட அந்த விக்கிரகம், கடைசியில் கலிங்க மன்னர் கஜபதி என்பவரிடம் வந்து சேர்ந்தது. இதை அறிந்தார் அப்போது இருந்த ஸ்ரீ மத்வாசாரியார், உடனே



தன்சீடன் நரஹரி என்பவரை அழைத்து, "நீ போய் மன்னர் கஜபதியிடம் இருந்து, அந்த ஸ்ரீமூல ராமரை வாங்கிவா!" என்று சொல்லி அனுப்பினார். நரஹரி சென்ற நேரம்... மன்னர் கஜபதி இறந்து போய், அந்நாட்டு வழக்கப்படிப் புது அரசரைத்தேர்ந்தெடுக்க யானையின் துதிக்கையில் மாலையைத் தந்து, அதை அனுப்பி வைத்திருந்தார்கள். துதிக்கையில் மாலையுடன் வந்த யானை, நரஹரியைப் பார்த்ததும் அவர் கழுத்தில் மாலையைப்போட்டு, அரசராகத் தேர்ந்து எடுத்தது.

ஸ்ரீமூல ராமரைப் பெற்றுப் போக வந்த நரஹரி, அரசராகவே ஆகி விட்டார். அப்புறமென்ன? அரசரான நரஹரி தான் பட்டம் ஏற்றதும் முதல் வேலையாக, ஸ்ரீமூல ராமரைத்தானே கொணர்ந்து, குருநாதான ஸ்ரீமத்வரிடம் சமர்ப்பணம் செய்தார்.

ஸ்ரீமத்வாசாரியாரும் அவருடைய சீடர்களும் வழி வழியாகப் பூஜித்த இந்த ஸ்ரீமூல ராமர், இப்போது உத்திராதி மடத்தில் எழுந்தருளி இருக்கிறார். இவர் இருக்குமிடத்தில் தர்ம-அர்த்த-காம-மோக்ஷம்/அறம்-பொருள்-இன்பம்- வீடு எனும் நான்கு வித புருஷார்த்தங்களும் எப்போதும் இருக்கும் என, ஸ்ரீ மத்வாசாரியாரே விவரித்திருக்கிறார்.

நரஹரிக்கு சர்வ மங்கலங்களையும் அருளிய ஸ்ரீமூலராமர் நமக்கும் அருளுமாறு வேண்டுவோம்! அருள்வார்!

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# செவ்வாய் யந்திரம்



செவ்வாய் யந்திரம் மிகவும் அருமையாக வேலை செய்யும். இந்த யந்திரம் வைத்து 21 பூஜை நாட்கள் விரதமிருந்து பூஜிப்பதன் மூலம் தீராத கடன் தொல்லைகள் தீரும். நல்ல வரன் அமையும். குழந்தை இல்லாமல் இருப்பவர்களுக்கு குழந்தை பேறு உண்டாகும் எண்ணங்கள் ஈடேறும். போட்டியில் வெற்றி வாகை சூடுவார்கள். அடிக்கடி நடக்கும் விபத்துகளிருந்து கண் திருஷ்டிகளிருந்து விடுபடலாம். ரத்த கொதிப்பு உளளவர்களும் ஜாதகத்தில் செவ்வாய் 1, 4, 7, 10, 12 என்ற இடத்தில் உளளவர்களும் இந்த யந்திரம் மிகவும் நல்ல பலனை தரும்.

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்




KABA SURA KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 95004 95008

# அரிய ஆன்மிக தகவல்

பிறவிப் பிணி தீர்க்கும் இறவாப்புகழ்கொண்ட ராமேஸ்வரம் ராமபிரான் இலங்கையில் போர் முடித்து திரும்பியதும் ராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்கி, சிவலிங்கம் அமைத்து வழிபட்ட தலமே ராமேஸ்வரம்

இராமபிரான் பிரதிஷ்டை செய்வதற்கு, சிவலிங்கம் கொண்டுவர காசிக்கு சென்ற அனுமன் திரும்பிவர தாமதமானதால் சீதாபிராட்டியார் கடல் மணலில் ஓர் சிவலிங்கத்தை உருவாக்கித்தர, அதை ராமபிரான் பிரதிஷ்டை செய்தார் என்பது வரலாறு.



தாமதமாய் சிவலிங்கம் கொண்டுவந்த அனுமன் வருத்தமுற, அதை காசிலிங்கமாய் பிரதிஷ்டை செய்து வழிபடுவதும் அனைவரும் அறிந்ததே

ராமலிங்கேஸ்வரரின் கருவறை வெளிப் பிரகாரத்தில் உப்பால் ஆன சிவலிங்கமும் அம்பாள் சிலையும் இருப்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

அது எப்படி உருவானது? அதை உருவாக்கியவர் யார் என்பதனை இப்போது பார்க்கலாம்.

பாஸ்கர ராயர் என்பவர் ஒரு மாபெரும் ஞானி நவாவர்ண பூஜைக்கு உரை எழுதியவர், அந்த ஞானிக்கு ராமலிங்கேஸ்வரரை தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆவல் எழுந்தது, உடனே ராமேஸ்வரம் சென்றார். கருணை வடிவாய் கருவறையில் வீற்றிருந்த ராமலிங்கேஸ்வரரை வணங்கினார். சீதையின் கரங்களால் உருவாகி, ராமபிரான் பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்தை தரிசனம் செய்த திருப்தியோடு, அகம் குளிர வெளியே வந்தார்

இது நடந்து, சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இன்றுபோல் அன்றும் பகுத்தறிவு வாதம் என்னும் பெயரில் கடவுள்மீது அவநம்பிக்கை கொண்டோர் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தனர். அவர்களில் ஒருவன், பாஸ்கர ராயரை நெருங்கி கேள்வியோடு ஒரு பார்வை பார்த்தான், என்ன? என்றார், ராயர்.

அதற்கு அவன் "நீங்கள் ஒரு ஞானி என்று இங்குள்ளவர்கள் கூறினார்கள், அதனால், என் நீண்ட கால ஐயத்தை தாங்கள் போக்கியே ஆக வேண்டும்" என்றான், கேள், என்றார் ராயர்.
கருவறையில் உள்ள சிவலிங்கத்தை சீதாதேவி, கூடல் மணலால் உருவாக்கியதாக சொல்கிறார்கள்

ஆமாம், என்றார் ராயர்.

இது எப்படி சாத்தியம் ஆகும்? தினமும் கங்கை நீரால் அபிஷேகம் என்ற பெயரில் சில ஆயிரம் லிட்டர் நீரால் அபிஷேகம் செய்கிறார்கள். பல நூறு ஆண்டுகள் இப்படி தண்ணீர் ஊற்றியும் கடல் மணல் கரையாமல் இருப்பது சாத்தியமே அல்ல, எனவே இது ஒரு கட்டுக்கதை இதனை எப்படி நம்புவது? என்றான் அந்த அறிவாளி



ராயர் சிரித்தபடியே, இறையருள் இருப்பின் எல்லாமே சாத்தியம் தான், என்கிறார் "என்னால் நம்பமுடியாது" என்றான் அறிவாளியாய் தன்னை நம்பிக் கொண்டிருப்பவன். நீ யார் நம்புவதற்கு? என்று எதிர்கேள்வி எதுவும் கேட்காத ராயர், "நீ உடனே ஓடிச்சென்று ஐந்தாறு படி உப்பு வாங்கி வா, என்றார்

அவன் வரைந்து சென்று ராயர் சொன்னவாறு, உப்பை வாங்கி வந்தான், அதை பெற்றுக்கொண்டு ராயர், மனமார இறைவனை சிந்தித்து வணங்கி, அந்த உப்பைக்கொண்டு ஒரு சிவலிங்கத்தையும் அம்பாள் சிலையையும் உருவாக்கினார். உப்பு என்றே சொல்லமுடியாத அளவுக்கு தெய்வத் திருவுருவங்கள் அங்கே தோன்றின. அந்த அறிவாளியைப் பார்த்து, ராயர் சொன்னார், நம்பிக்கையோடு தொழுதால் உப்பும் மணலும் கூட கடவுளாகும், நம்பிக்கை இல்லாதவன் கண்களுக்கு கடவுளே கூட கல்லாய் தான் தெரிவார், என்றார்.

தன் அறியாமையை எண்ணி, அவமானத்தால் தலைகுனிந்தான் அந்த அறிவாளி.
எந்த சிவலிங்கத்திற்கு வஜ்ஜிரேஸ்வரர் என்றும் அம்பாளுக்கு மனோன்மணி என்றும் பெயர்.
ராமலிங்கேஸ்வரர் கருவறையை சுற்றி வளம் வருகையில் பின்புறம் லிங்கோத்பவருக்கு எதிரில் இந்த உப்பாலான சிவலிங்கமும் அம்பாளும் உள்ளனர்.

இனியாவது, ராமேஸ்வர யாத்திரை செல்வோர் இந்த அதிசர தெய்வங்களை தவறாமல் வணங்குங்கள்

~ ரா. பன்னீர்செல்வம்




SWASASUGAM SYRUP
For Clearing Respiratory Tract
Call: 95004 95008

# பஞ்ச கவ்யம்

அண்டத்தில் உள்ளது தான் பிண்டத்தில் என்று முதுமொழியை ஆன்மிக பெரியோர்கள் அடிக்கடி பயன்படுத்துவதுண்டு இதன் பொருளை உற்று நோக்குங்கள், அண்டத்தின் இயக்கமே பஞ்சபூதங்களின் அடிப்படையில்தான் அதே அடிப்படையில் தான் நம் உடலின் செயல்பாடுகள் நல்ல நிலையில் இயக்க, பஞ்சபூதங்களின் சக்தியை முறையாகப் பெறுகின்ற வகையில் நமது வாழ்வியல் முறை அமைவது அவசியம்.




இப்படி பஞ்சபூதத் தத்துவத்தால் நம் உடலைக்காக்கும் ஒப்பற்ற ஆற்றலைப் பெற்றுள்ளதே பஞ்ச கவ்யம் எனப்படுகிறது, தேவர்களும் தெய்வங்களும் உறைகின்ற, தெய்வீகத் தன்மை வாய்ந்த பசுவிலிருந்து கிடைப்பதே இந்த பஞ்ச கவ்யம் கோமியம் எனப்படும் கோமூத்திரம், கோமயம் எனப்படும் சாணம், பசுவின் பால், நெய், தயிர் முதலிய ஐந்தினையுந்தான் பஞ்ச கவ்யம் என்கிறோம்.

இதில் கோமியத்தில் வருணனும் சாணத்தில் அக்கினியும் தயிரில் வாயுவும் பாலில் சந்திரனும் நெய்யில் சூரியனும் வசிப்பதாக ஐதீகம். இவற்றை சரியான அளவில் கலந்து, எனது துக்கத்துக்கு காரணமான பாபம் எனது உடலின் எந்த பாகத்தில் உள்ளதோ அந்த பாபம் நான் சாப்பிடும் இந்த பஞ்ச கவ்யத்தால் விலகட்டும் என்னும் மந்திரத்தைக் கூறி, இந்த பஞ்சகவ்யத்தை உண்டால் நமது பாவங்கள் விலகி, துக்கங்கள் தொலையும்.

இன்னும் சரியாக சொல்லப் போனால், பசும் பாலால் தரித்திரம் விலகும், பசுந்தயிரால் குழந்தை செல்வம் உண்டாகி வம்சம் வளரும், கோமியத்தால் பாபம் தொலையும், சாணத்தால் வியாதிகள் அகலும், நெய்யால் ஞானம் வளரும்.

இப்போது புரிகிறதா? நேரம் கிடைக்கும் போதெல்லாம் இந்த பஞ்சகவ்யத்தை உண்டால், உடல் மட்டுமல்ல, ஆன்மாவும் தூய்மை பெறும் எனவே, பஞ்சகவ்யம் என்னும் பசுவின் கொடையை நெஞ்சார ஏற்போம்.




Special Birthday Ritual Packages for You

Get 40% OFF

Call: **95004 95008**

# மூலிகை ரகசியம்



## வேலி பருத்தி (எ) உத்தாமணி (Pergularia Daemia)

பெயருக்குத் தகுந்தாற்போல் வேலியில் படர்ந்து வளரும் கொடிவகையான தாவரமே இந்த வேலிபருத்தி என்னும் மூலிகையாம்

வேலியில் இருப்பதாலோ என்னமோ, இதன் மகத்துவத்தை அறியாமல் விட்டு விடுகின்றனர். ஆனால், சித்தர்கள் இந்த மூலிகையின் மகத்துவத்தை உணர்ந்து, பயன்படுத்தி, பற்பல நோய்களைத் தீர்த்திருக்கின்றனர்,

இதனாலேயே குப்பைமேனி போலவே இதுவும் எளிதாக கிடைக்கும் மூலிகையாக மதிக்கப்படுகிறது.

**பயன்பாடுகள்:**

சாதாரணமாக வேலியில் காணப்பட்டாலும் இந்த மூலிகை குணமாக்கும் நோய்களைப் பார்த்தால் இதை ராஜ மூலிகை என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு இன்றைக்கு மனித குலத்தை வாட்டி வதைக்கும் பல முக்கிய நோய்களைத் தீர்த்துவைக்கும் அருமருந்தாகவே உள்ளது இந்த வேலி பருத்தி மூலிகை?



தீர்க்கும் நோய்கள்: இன்றைக்கு பெரும் பாலான மக்களை தினம் தினம் மிரட்டிக் கொண்டிருக்கும் நீரிழிவு நோய், ரத்த அழுத்தம் எனப்படும் பிப்.

பெண்களை துன்புறுத்தும் மாதவிடாய் கால வயிற்று வலி, கர்ப்பப்பை பிரச்சினைகள், குழந்தைகளை மிரட்டும் சுவாசக் கோளாறு இப்படி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பல பருவத்தினருக்கும் பயனிப்பதே இந்த மூலிகையாகும்.

**பயன்படுத்தும் முறை:**

இதய வடிவத்தில் உள்ள இந்த இலைகளை சாறு பிழிந்து சிறிதளவே கொடுக்கும் போது குழந்தைகளின் சுவாசக்கோளாறு நீங்குகிறது,

இலையின் சாற்றினை எடுத்து சூடாக்கி, காலை மாலை குடிக்க, காசநோய் (தப்பி) குணமாகிறது.

இதன் 6 இலைகளை கூழாக அரைத்து சுத்தமான பசும்பாலில் கலந்து, 6நாட்கள் குடித்தால் பக்கவிளைவு ஏதும் இல்லாமல் ரத்த அழுத்த நோய் கட்டுக்குள் வந்துவிடும்.

வேலி பருத்தியின் இலைகளை நிழலில் காயவைத்து பொடியாக்கி நீரில் கலந்து குடித்து வர சர்க்கரை நோய் சீராகும்.

6இலைகளை எடுத்து சுத்தமாகக் கழுவி, வெறும் வயிற்றில் மென்று தின்ன, பெண்களின் மாதவிடாய்க் கோளாறுகள் நீங்கி, கர்ப்பப்பை பலம் பெறும்.

இவை தவிர உடல்வலி, நரம்புகள் பலவீனம், ஆண்மைக் குறைவு, நூரையீரல் பலவீனம் என ஏகப்பட்ட நோய்களைத் தீர்க்கும் உள்ளவர்கள் உத்தாமணி என்ற பெயரில் பயன் படுத்தி வந்தனர்.

அந்தக்கால பாட்டி வைத்திடத்தில் உத்தாமணி என முக்கிய இடம்பெற்ற வேலி பருத்தியை பக்கவிளைவுகளே இல்லாத, சரியான பலனைப் பெற்று மகிழ்வுடன் வாழ்வோம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# டிசம்பர் 7 – கால பைரவ அஷ்டமி

ஒன்று - நான்கு

எவ்வளவோ நல்லவைகளைக் கற்கிறோம், ஏற்கிறோம், அனுபவத்திலும் கொண்டு வருகிறோம், நலம்பெறுகின்றோம். இருந்தாலும், நாம் கற்ற கல்வியும் அனுபவங்களும் உதவாமல், முக்கியமான நேரங்களில் மறைந்து விடுகின்றன. காரணம் என்ன?

மும்மூர்த்திகளின் வடிவம் பைரவர். ஒருசமயம் பைரவர், சிவபெருமானையும் அம்பிகையையும் தரிசிப்பதற்காகக் கைலைக்கு வந்தார், வந்தவர் தன் வாகனமான சுவானத்தை(நாயை) வெளியே நிறுத்திவிட்டு, உள்ளே போய்த் தரிசனம் முடித்து வெளியில் வந்தார். அவருடைய வாகனமான சுவானத்தைக் காணோம், திகைத்தார் பைரவர், தேடிப்பார்த்தார், பலனில்லை, வேறுவழியின்றி மறுபடியும் உள்ளேபோய், சிவபெருமானிடம் முறையிட்டார், "பரம்பொருளே! தங்கள் ஆணையின்படி சுவானத்தில் ஏறி, உலகம் முழுதும் வலம்வந்து, செயல்பட்டு வருகிறேன். இன்று இங்கே தரிசனத்திற்காக வந்த என்வாகனத்தைக் காணவில்லை, காரணமும் தெரிய வில்லை" என முறையிட்டார்.




சிவபெருமான் பதில் சொன்னார், "பைரவர் 'நான் சிறந்த

வன். எனக்கு ஈடுஇணை யாருமில்லை' என்ற எண்ணம், உனக்குள் அழுத்தமாகப் பதிந்து விட்டது. உன்னுடைய அந்த இறுமாப்பு, உன் வாகனத்தை மறைத்து விட்டது. "உன் வாகனத்தை, ஏதோ சாதாரணமான சுவானம்(நாய்) என எண்ணி விட்டாய் நீ! அது சாதாரணமானது அல்ல. வேதமே உனக்கு வாகனமாக அமைந்துள்ளது, அது உனக்கும் தெரியும். அகங்காரம் கொண்டவர்க்கு, வேதத்தின் ஜீவன் விளங்குவது இல்லை. அறிந்து கொள்!" என்றார் சிவபெருமான்.
பயிரவர் தன் நிலை எண்ணித் தளர்ந்தார், "கருணாகரா என் போன்றவர்களுக்குத் தாங்கள் அளித்த தண்டனை, சரியானது தான்! போதும் இந்த தண்டனை! இழந்ததை மீண்டும் அடையுமாறு, அருள் புரியுங்கள்!" என வேண்டினார்.

வேண்டத்தக்கது அறிவோனும் வேண்ட முழுதும் தருவோனுமாகிய சிவபெருமான் அருள் புரிந்தார், "பயிரவா! மதுரைக்கு வடமேற்கில், யாம் விரும்பிய நல்தலம் திரு வாதவூர். அங்கு சென்று வழிபாடு செய்! எண்ணியதை எய்துவாய்!" என்றார். பரம்பொருளை வணங்கிப் புறப்பட்டார் பயிரவர், திரு வாதவூர் வந்து சேர்ந்தார், தன் பெயரில் ஒரு தீர்த்தம் உருவாக்கி நீராடினார், திருநீறு அணிந்தார், ருத்ராக்ஷ மாலை அணிந்து சிவபெருமானை ஆத்மார்த்தமாக வழி பட்டார்.
"வேத முதல்வா! பொல்லாத செருக்கால், யான்பட்ட துயரம் போதும். வேதமயமான வாகனத்தை இழந்த அடினுக்கு, மீண்டும் அதைத்தந்து அருள் புரியுங்கள்!" என அழுது தொழுது வேண்டினார்.
அப்போதே மூல லிங்கத்தில் இருந்து, வேத முதல்வரான சிவபெருமான் வெளிப்பட்டார், கூடவே வேதமயமான நான்கு சுவானங்(நாய்)களும் வெளிப்பட்டன.

"பயிரவா! பேறு தரும் இவைகளைப் பெற்றுக்கொள்! அமைதியாகச் செயல்படு உன்னால் உண்டாக்கப் பட்ட பயிரவ தீர்த்தத்தில் நீராடி வழிபாடு செய்பவர்கள், எண்ணியதை எய்துவார்கள்" என்று அருளிய சிவபெருமான், சிவலிங்கத்தினுள்ளே மறைந்தார். 50ஒன்றுக்கு நான்காகப் பெற்ற பயிரவர், மகிழ்வோடு திரும்பினார்.
கடுமையாக உழைக்கும் பலரும் முன்னேற்றம் காண்கிறார்கள், சந்தேகமில்லை. ஆனால் சற்று முன்னேற்றம் அடைந்ததும் மதி மயங்குகிறதுளூ களை போலக் கர்வம் தலைநீட்டி விடுகிறது, அதன் காரணமாக, நம் வாழ்க்கை யைச்செலுத்துவது எதுவோ, அது விலகிப்போய் விடுகின் றது. திருந்தி, இறைவனிடம் சரணாகதி அடைந்து முறை யிட்டால், இறையருளால் நன்னிலை அடையலாம் என்பதை விளக்கும் வரலாறு இது

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்



# யந்திரமும் மந்திரமும்

சிவசிவ
ஓம் நம சிவாய நம
ஓம் கங் கணபதியே நம
ஓம் சரவணபவாய நம
ஓம் சிவசக்தியே நம

செல்வங்களை அள்ள ஜோதிடம் கூறும் அருமையான வழிகள் செல்வத்தை பெற அல்லது ஈர்க்க செய்ய வேண்டிய வழிபாடுகள், சொல்ல வேண்டிய மந்திரங்கள் என்ன என்பதை ஜோதிடம் விளக்குகின்றது. செல்வம் நம் வாழ்வில் பெருக ஜோதிடர்கள் கூறும் அருமையான வழிகள் இதோ..

எல்லோருக்கும் செல்வந்தர் ஆக வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். இன்றளவும் செல்வத்தை பெற என்ன வழி இருக்கிறது என்று தான் நாம் தேடிக் கொண்டு இருக்கிறோம். ஏனெனில் பணத்தின் முக்கியத்துவம் மிகவும் இன்றியமையாதது. அன்றாட வாழ்க்கையை வாழக் கூட ஒவ்வொருத்தருக்கும் பணம் தேவைப்படுகிறது. பணப்புழக்கம் இல்லாத காலங்களில் கூட பண்டமாற்று முறையில் பொருட்களை வாங்கிக் கொண்டு தான் வாழ்ந்து வந்தோம்.
அப்படிப்பட்ட செல்வங்களை எப்படி எளிதாக பெறலாம். உங்கள் வீட்டிற்க்கு லட்சுமி தேவியை அழைத்து எப்படி கொட்டோ கொட்டுனு செல்வங்களை அள்ளலாம், நிதிநிலையை வலுவாக்க செல்வந்தரான குபேரனை எப்படி மகிழ்விக்கலாம், செல்வத்தை எப்படி ஈர்க்கலாம் என்று ஜோதிடங்கள் உங்களுக்கு சில வழிகளை கூறுகிறது. இதைப் பின்பற்றி வந்தால் உங்கள் வீட்டிலும் செல்வ செழிப்பு பெருகும், பணக் கஷ்டங்கள் நீங்கும் . மகா லட்சுமியின் அருளைப் பெற்று செல்வந்தராக வாழலாம். வீட்டில் நிம்மதி, சந்தோஷம், அன்பு, செல்வம் என்று எல்லா வளங்களும் நிறையும்.

மகாலட்சுமியின் வருகையின் மூலம் செல்வங்களை பெற வழிகள்
செல்வத்தை பெற முதல் வழி நாம் லட்சுமி தேவியை வழிபட வேண்டும். ஏனெனில் அவளின் ஆசியும் அருளும் மட்டுமே அதை நமக்கு பெற்றுத் தரும். மகாலட்சுமியை தினந்தோறும் வெள்ளிக்கிழமை நாளில் வழிபடுங்கள் நெய் அல்லது நல்லெண்ணெய்யை ஊற்றி தீபம் ஏற்றி வழிபடுங்கள். மகாலட்சுமியின் புகைப்படத்திற்கு மஞ்சள், குங்குமம் இட்டு மலர்களால் அர்ச்சித்து சூடம், பத்தி, சாம்பிராணி என ஆர்த்தி காட்டி வழிபட்டு வாருங்கள். பால் மற்றும் சர்க்கரை சேர்க்கப்பட்ட இனிப்புகளை வழங்கி வழிபடுங்கள்.

## பூஜை வழிபாடு

செல்வங்களை ஈர்க்க நிறைய யந்திரங்கள் உள்ளன. ஸ்ரீ யந்திரம், மகாலட்சுமி யந்திரம்,லட்சுமி குபேரர் யந்திரம். இந்த யந்திரங்களை செப்புத் தகடு, வெள்ளி பேப்பரால் ஆன ஒன்றை குபேரன் மற்றும் மகாலட்சுமி வசிக்கும் வீட்டின் வடக்கு பகுதியில் வைத்து வழிபட்டு வாருங்கள்.

நவகிரகஸ் யந்திரம் :

இதன் மூலம் ஒன்பது கிரகங்களின் எதிர்மறை ஆற்றலை குறைத்து நேர்மறை ஆற்றலை அதிகரித்து அதன் மூலம் பொருளாதார நிலையை வலுமையாக்க முடியும்.



மகாலட்சுமி யந்திரம் :

இந்த யந்திரத்தை வீட்டில் வைத்து வழிபடும் போது குடும்பத்தின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் செல்வாக்கு காக்கப்படுகிறது. மேலும் கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமையை வலிமையாக்குகிறது.

குபேர யந்திரம் :

குபேர யந்திரம் பணம் கொட்ட உதவுகிறது. இதை வழிபடும் போது பணம் வருவதற்கான தடைகள் நீங்கி செல்வ வரவை உயர்த்துகிறது.



ஸ்ரீ யந்திரம் :

இந்த யந்திர வழிபாடு மகாலட்சுமியின் அருளை பெற்றுத் தந்து அதன் மூலம் குடும்பத்தில் செல்வாக்கு, அமைதி, கணவன் மனைவி அன்பு, மகிழ்ச்சி போன்றவற்றை வலிமையாக்குகிறது. நிதி நிலையை வலிமையாக்கி செல்வந்தராக ஆக உதவுகிற மந்திரங்கள் : செல்வங்களை ஈர்க்க மற்றொரு சிறந்த வழி மந்திரங்களை ஓதுவது.



லட்சுமி நாராயணன் மந்திரம் :

செல்வத்தின் அதிபதி மகாலட்சுமி தேவி அவர்கள். எனவே லட்சுமி தேவியையும் நாராயணனையும் " ஓம் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணாய் நமக" என்ற மந்திரங்கள் ஓதி வழிபட்டு வாருங்கள். செல்வமும் மகிழ்ச்சியும் கிட்டும்.

விஷ்ணு மந்திரம் :

இந்த உலகத்தையே ஆளும் சக்தி விஷ்ணு பகவான். அப்படிப்பட்ட அவரை "ஓம் நமோ பகவதே வாசுதேவய நமக" என்ற மந்திரத்தின் மூலம் வழிபட்டு வந்தால் செல்வ செழிப்பு பெருகும்.

லட்சுமி கணேஷ் மந்திரம் :

செல்வத்தின் அதிபதி லட்சுமி தேவியையும், ஞானத்தின் அதிபதி கணேசனையும் "ஓம் கம் ஸ்ரீம் சர்வா சித்தி பிரதய் ஷ்ரீம் கம் நமக" மூலம் வழிபட்டு வந்தால் செல்வமும், அறிவும் வளரும்.

லட்சுமி குபேர மந்திரம் :

தீராத கடனிலிருந்து விடுபட இந்த மந்திரம் பயன்படுகிறது. "ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்ரீம் ஸ்ரீம் குபேரயா, அஷ்டா-லட்சுமி மாமா கிரிஹே தனம் புராய புராய நமக" என்று ஓதி குபேரனையும் லட்சுமி தேவியையும்

வழிபட்டு வாருங்கள்.



மகாலட்சுமி மந்திரம் :
செல்வ செழிப்பு, அதிர்ஷ்டம், வர வேண்டிய பணத்தை பெற, நிதிநிலையை வலிமையாக்க என பல்வேறு பலனை இதன் மூலம் அடையலாம்.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் கமலே கமலலேயே பிரசீத் , பிரசீத் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் மகாலட்சுமயே நமக" ஓதுங்கள். மகாலட்சுமியை வழிபடுங்கள். நன்மைகள் கிட்டும்.

குபேர பகவானை மகிழ்விக்க, மகாலட்சுமி தேவியின் ஆசியை பெற :
வீட்டில் உள்ள பண லாக்கரை தெற்கு அல்லது தென் மேற்கு அலமாரியில் வையுங்கள். அதே மாதிரி வடக்கு திசையை பார்த்த வண்ணம் திறக்குமாறு இருக்க வேண்டும். பணலாக்கருக்கு முன்னால் ஒரு கண்ணாடியை பொருத்துங்கள்

~ முகநூலில் இருந்து

# சித்தர்பூமி
# மாங்கொட்டை சித்தர்

தான் இருக்கும் இடம் காடோ, மலையோ, குகையோ, அல்லது சாக்கடையோ இவை எதுவாக இருந்தாலும் அந்த இடத்தை தெய்வீகத் தன்மை பொருந்திய இடமாக மாற்றக்கூடிய வல்லமையும் சக்தியும் பெற்றவர்கள் சித்தர் பெருமக்கள்.



இந்தப் பகுதியில் நாம் பார்க்கவிருக்கும் சித்தரும் இப்படித்தான். சாதாரண மனிதராய் பார்ப்போர் கண்களுக்குக் காட்சிதந்து, பாவங்கள் போக்கியவர், தன் அரும் பெரும் ஆற்றலால் துன்பப்பட்ட அனைவருக்கும் வழிகாட்டிய வள்ளல், தங்களுக்கு குழந்தைப்பேறு இல்லை என குறைபட்டோருக்கு அந்த பாக்கியத்தை அருளிய மகான்.

யார் இவர்? உருவத்தில் குறுகி நின்று குள்ளஞானி எனப் பெயர் பெற்றாலும் மக்கள் உள்ளங்களை ஆட்சி செய்த மாபெரும் ஞானி.


ஞானி என்றால் சாதாரண ஞானி அல்ல, தேசிய மகாகவி

பாரதியாருக்கே ஞானி குருவாய் விளங்கிய தத்துவ ஞானி.

இவர் எப்படி பாரதியாருக்கு ஞானிகுருவாய் இருந்தார்? இவர் செய்த அற்புதங்கள் என்ன? எப்படிப்பட்ட கர்மவினைகளை இவர் எவ்வாறு நீக்கினார்? மாங்கொட்டை சுவாமிகள் என இவருக்குப் பெயர் வந்தது எப்படி?

பாரதியார் ஒரு தீர்க்கதரிசனம் மிகுந்த கவிஞர்னு நம்ம எல்லாருக்குமே தெரியும். அப்படிப்பட்ட தீர்க்க தரிசி. நம்ம மாங்கொட்டை சுவாமிகளப்பத்தி பாரதி 66 அப்படிங்கற ஒரு நூல்ல எழுதியிருக்கற தகவல் இவரை யாருன்னு அடையாளம் காட்டும் அதாவது,

தேசத்தார் இவன் பெயரை குள்ளச்சாமி சித்தர் பிரான் என்று உரைப்பர், தெளிந்த ஞானி, நாசத்தை அழித்தும் விட்டான், யமனை வென்றான், ஞானி கங்கைதனை முடிமீது ஏந்தி நின்றான் காயகல்பம் செய்துவிட்டான், அவன் வாழ்நாளை கணக்கிட்டு வயதுரைப்பார் யாருமில்லை



முண்டாசு இல்லா பாரதியும்
மாங்கொட்டை சித்தரும்

இப்படி பாரதியாரே எழுதியிருக்கார்னா இவர் எப்படிப்பட்ட ஞானின்னு நம்மால் உணர முடிகிறது அல்லவா? இவர் நாகப்பட்டினத்திற்கு வந்தது எப்படி?

நாகப்பட்டிணத்த சேர்ந்த ஒரு அன்பர், பாரதியார் மீது பற்று கொண்டவர், அவர், பாரதியாரைப் பார்ப்பதற்காக ஒருமுறை பாண்டிச்செரிக்கு சென்றிருந்தார். அங்குதான் பாரதியாரையே பரிகாசம் செய்யும் இந்த ஞானியைக் கண்டிருக்கிறார், அந்த அன்பர்

இந்த அன்பரைக் கண்ட குள்ளச்சாமி, எங்கிருந்து வருகிறிர்? எனக்கேட்க நாகப்பட்டிணத்திலிருந்து வந்திருப்பதாக சொல்கிறார் உடனே, குள்ளச்சாமிக்கு

கர்மவினைப் பயனோ கடவுள் அருளோ நாகப்பட்டிணம் என்ற வார்த்தையைக் கேட்டதுமே, அந்த புண்ணிய பூமி அல்லவா நான் முக்தி அடைய ஏற்ற இடம், என்று கூறி, தானே விரும்பி நாகைக்கு வந்திருக்கிறார்.

நாகப்பட்டிணம் கோட்டை வாசல் தெருவில் தற்போது அவரது ஜீவசமாதி அமைந்திருக்கும் இந்த இடம் அன்று ஒரு பெரிய மாந்தோப்பாக இருந்துள்ளது, அந்த மாந்தோப்பிலே தங்கியிருந்த நமது சித்தரிடம் பலரும் வந்து தங்கள் குறைகளை சொல்ல, தோப்பிலிருந்து ஒரு மாங்காயைப் பறித்து வர

சொல்வாராம், அவர்கள் மாங்காயை பறித்து வந்து கொடுத்ததும் அதை உடைத்து, உள்ளே இருக்கும் மாங்கொட்டையிலிருந்து சிறிது பருப்பை எடுத்து கொடுப்பாராம் அதை பக்தியுடன் வாங்கி சாப்பிட்ட அனைவருக்கும் உடல் நோயும் மனக்குறையும் உடனடியாய் தீர்ந்திருக்கிறது, இவரது மகிமையை பரிபூரணமாய் உணர்ந்த மக்கள் இவருக்கு வைத்த பெயர்தான் மாங்கொட்டை சித்தர்

இப்படி மாங்கொட்டையைக் கொடுத்தே, பல ஆண்டுகளாக குழந்தை இல்லாத தம்பதியரின் குறையைப் போக்கியுள்ளார், என்ன பிரச்சனை என்று யார் வந்தாலும் மாங்கொட்டையே மருந்தாய் மாறிய அதிசயம் இங்கே நெகிழ்ந்திருக்கிறது.

இந்த இடத்தில் வெறும் 18 மாதங்களே வாழ்ந்த சித்தர், பல நூறு ஆண்டுகள் வாழ்ந்து, செய்யக்கூடிய எவ்வளவோ விந்தைகளைச் செய்திருக்கிறார், இவர் இங்கே இருந்த காலம், ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் தான் முக்தியடைய வேண்டிய நாள் வந்ததும் இங்கே ஜீவசமாதியில் ஐக்கியமாகி இருக்கிறார்.

ஆனால், குடியிருப்புகளுக்கு மத்தியில் சமாதியா? என வெகுண்டெழுந்த ஆங்கிலேய அதிகாரி, ஜீவசமாதியை இடித்துத்தள்ள உத்தரவிட்டிருக்கிறார், அதே நேரத்தில் அந்த அதிகாரியினுடைய ஒரே மகன் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிருக்குப்போராடி, சித்தரை வேண்டியபின் அவர் மகன் நலமடைந்த அதிசயத்தை நிகழ்த்தியிருக்கிறார்.

இன்றும் இவரது ஜீவசமாதியை தரிசிக்க வரும் பக்தர்கள் மாங்காய்களை வாங்கி வந்து கொடுக்க, அதை உடைத்து மாங்கொட்டையையே நைவேத்யம் செய்கிறார்கள்.

திருமேனி தரித்து இங்கு தங்கியிருந்தபோது மாங்கொட்டை சித்தர் செய்த அற்புதங்களுக்கு கொஞ்சமும் குறையாமல் இன்றும் இவரது ஜீவசமாதியில் மாங்கொட்டை பிரசாதத்தைப் பெற்று ஆயிரமாயிரம் பக்தர்கள் தங்கள் குறைகள் நீங்கிப் பெறுகிறார்கள்.

மனநோய் பீடித்து, சித்தம் கலங்கிய ஒரு இளைஞர் இந்த சித்தரின் ஆசியால் வெளிநாட்டில் வேலை கிடைத்து அமோக வாழ்வு வாழ்கிறாராம்.

இந்த ஜீவசமாதியில் வந்து என்ன பிரச்சினை என்று வேண்டினாலும் கைமேல் பலன் கொடுக்கிறார் மாங்கொட்டை சித்தர் என்று மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர்.

நாகை கோட்டை வாசல் தெருவில் அமைந்திருக்கும் மாங்கொட்டை சித்தரின் ஜீவசமாதிக்கு சென்று வணங்குவோம். சிறப்பான வாழ்வினைப் பெறுவோம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# அன்னையும் அம்ஜத்தும்



யாரையும் யாரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒதுக்கி விடக் கூடாது, ஒதுக்கவும் முடியாது. இதில் வெற்றி பெற்று வழி காட்டியவர்கள் - மகான்கள்.அவ்வாறு வழி காட்டிய ஒரு நிகழ்வு. அன்னை சாரதாதேவி. அனைவரும் அவரை அன்னை என்றே அழைப்பார்கள், நாமும் அன்னை என்றே பார்க்கலாம்.

ஒரு சமயம் அன்னை நோய்வாய்ப்பட்டு, அறையில் கட்டிலில் படுத்திருந்தார், பார்ப்பதற்காகப் பலர் வந்துபோய்க்கொண்டிருந்தார்கள். உதவியாளராக பிரம்மசாரி ஒருவர் அன்னையின் அருகிலேயே இருந்தார். அந்த சமயம்... சற்று மெலிந்த-கறுத்த உருவம், கந்தை ஆடையுடன் குச்சியை ஊன்றியபடி உள்ளே வந்தது. வந்தவர் பெயர் "அம்ஜத்". அவர்ஒரு திருடர், இருந்தாலும் அவர் மீது அன்னைக்கு அதிக அன்பு உண்டு. அவரைப் பார்த்தவுடன், "அம்ஜத்! உள்ளே வா!" என்றார் அன்னை. ஆனால் அம்ஜத் உள்ளே போக வில்லை, வாசற்படியில் நின்றபடியே பேசத் தொடங்கினார். அதைப் பார்த்த பிரம்மசாரி, தன் வேலைகளைக் கவனிக்க வெளியே சென்றார் மாலை நேரம் நெருங்கியது. வயிறு நிறைய சாப்பிட்ட திருப்தியுடன், வெற்றிலை-பாக்கை மென்றவாறு - ஆடைத்தலைப்பில் சிற்றுண்டிகளை ஒரு சிறு மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு, கையில் ஒரு தைலக் குடுவையுடன் அம்ஜத் புறப்பட்டார்.

பார்த்த உதவியாளருக்கு ஒன்றும் புரியவில்லை, அன்னையை நெருங்கினார். அவர் மனதைப் புரிந்துகொண்ட அன்னை, "அம்ஜத்துக்கு மூளைக்கொதிப்பு அதிகமாகி விட்டது, தாங்க முடியவில்லை என்று வருந்தினான், தைலம் தடவிக்கொள்ளச் செய்து, கொஞ்சம் கையிலும் கொடுத்து அனுப்பினேன், வயிறு நிறைய சாப்பாடு போட்டேன்" எனச்சொன்னார். அன்னையின் மனம் புரிந்த உதவியாளர் வாய்திறக்க வில்லை. அம்ஜத் அடிக்கடி வருவதும், அன்னை ஏவிய வேலைகளைச்செய்வதும், அன்னையிடம் உதவி பெற்றுத் திரும்புவதும் அடிக்கடி நடந்தன.

மற்றொரு முறை... அன்னை பசியின்மை காரணமாக, நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தார். வந்து பார்த்த மருத்துவர்கள், "அன்னாசிப்பழம் கொடுத்தால் நோய் சரியாகி விடும்" என்றார்கள். அந்த சுற்று வட்டாரத்தில் எங்கு தேடினாலும் அன்னாசிப்பழம் கிடைக்காது. அனைவரும் தவியாய்தவித்த அந்த நிலையில், தகவலறிந்த அம்ஜத் எங்கெங்கோ சுற்றி அலைந்து, அன்னைக்குத் தேவையான அன்னாசிப் பழங்களைக் கொண்டு வந்து கொடுத்தார். அனைவரும் வியந்தார்கள், அன்னையின் கண்களில் கண்ணீர் கசிந்தது. அன்பினால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை என்பதை நிரூபித்துக் காட்டிய அன்னையின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்று இது.

நம்மால், அன்னையைப் போல அனைவரிடமும் அன்பு செலுத்த இயலாவிட்டாலும், நம்மைச் சுற்றி இருப்பவர்களிடமாவது அன்பாக இருப்போம் அல்லல்களை வெல்வோம்!

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# எண்கணிதம்

சில முக்கிய குறிப்புகள்

கடந்த இதழ்களில் எண்கணிதம் பற்றிய அடிப்படைத் தன்மைகளைப் பற்றியும் இன்னும் பல சிறப்பு தகவல்களையும் பார்த்தோம்.

இப்போது, பெயரிடும் முறையைப்பற்றி பார்ப்போம், தனிநபர் ஒருவருக்கு பெயரிடும் போது நாம் முன்பே சொன்னது போல பிறந்த எண், கூட்டு எண் இவற்றிக்கு ஒத்து வருகின்ற அதிர்ஷ்ட எண் அதாவது நன்மை செய்யும் எண் எது என்று கணித்து, பின்பு பெயரிட வேண்டும். அதே நேரத்தில் அந்த நபரின் ஜாதகத்தில் நாம் பெயர் வைக்கும் எண்ணின் கிரக நிலை பற்றி ஆராய வேண்டும்.



அதாவது,  ஒருவருக்கு, 23, 32, 41, என ஐந்து எண் வரும்படி பெயர் வைக்க வேண்டும் என்றால் அவருடைய ஜனைகால ஜாதகத்தில் 5 எண்ணிற்குரிய புதன் கிரகம் நிறுவி, உச்சமா என்பதைப் பார்த்து தான் பெயர் வைக்க வேண்டும். அதோடு அந்த நபரை நேரிலே பார்த்து, அவரது உடலின் அகர்ஷண சக்தியை அறிந்து பெயர்வைப்பதே நல்ல பலனைத்தரும்.

உதாரணத்திற்கு, 33என்று எண்  எண் அதாவது சக்கர ஆதிக்கம் கொண்டது ஆனால், 33 என்ற எண் வருவாயை ஏற்று, செலவே இல்லாத தன்மையைக் குறிக்கும் வருமானத்திற்கு இது சிறந்த எண்ணாக இருந்தாலும் தனிப்பட்ட ஒரு நபருக்கு பெயராக வரும் போது அவருக்கு செரிமானக் கோளாறை உண்டாக்கும். நிறைய சாப்பிட முடியும் ஆனால், ஜீரணம் ஆகாது என்றால் அஜிரனைக் கோளாறு தானே?

சூரியன் கிரகம் தோஷமாய் இருந்தால் அவருடைய தலைமுடி சரியாக படியாமல் குத்திக் கொண்டு நிற்கும். அவருக்கு அவருடைய ஆகர்ஷண சக்தியை அறிந்து அந்த கிரகம் பலன்தரும் வகையில் பெயர் வைத்தலே நலம்

எனவே, பெயர் வைக்கும் தருணத்தில் உடல் நிலை, தோற்றம், கிரகநிலை இப்படி பலவற்றை கருத்தில் கொண்டு பெயரிடுவதே நல்ல பலன்களைத் தரும்.

அதே போல தொழில் நிறுவனம் ஒன்றுக்கு பெயர் வைக்கும்போது அந்த நிறுவனத்தின் தலைவருடைய பிறந்த எண், விதி எண், பெயர் எண் இவற்றிற்கு ஒத்துவரும் நட்பு எண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும் அதே நேரத்தில் அந்த நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்ற அல்லது விற்பனை செய்யப்படுகின்ற பொருள் என்ன என்பதை மனதில் வைத்து பெயரிட வேண்டும். நீர்த்தன்மை கொண்ட பொருளை உற்பத்தி



செய்யும் நிறுவனத்திற்கு கனமான பொருள்களும் அதிபதியான கிரக எண் கொண்ட பெயரை வைத்தால் முடிவு எதிர்மறையாகிவிடும் எலக்ட்ரிகல். ரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு சந்திர ஆதிக்கம் கொண்ட பெயரும் ரசாயனத்தையே மருந்துப்பொருளாய் தயாரிக்கும் நிறுவனத்திற்கு சூரிய ஆதிக்கம் கொண்ட பெயரும் பொருத்தமானது

திரை அரங்குகள், ஓட்டல்களுக்கு 8 எண்ணில் பிறந்தவர்கள் அதிர்ஷடசாலிகளாய் இருப்பர்

ஒரு நிறுவனத்திற்கு அதிர்ஷ்டகரமான பெயர் வைத்துவிட்டு அதில் தயாரிக்கப்படும் பொருளின் டீசயனெ யேஅந பொருத்தமற்றதாக அமைந்தால் அந்த நிறுவனம் லாபம் ஈட்டாது?

எனவே, அந்த தொழிலின் அடிப்படைப் பொருள் எது? வெளிப்பாட்டுத் தன்மை எது? யார் பெயரில் தொழில் நடைபெறுகிறது என அனைத்தையும் ஆராய வேண்டும்.

உதாரணத்திற்கு, 5ம் எண்ணில் பிறந்தவர்கள், எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் ஓரிடத்தில் நீண்டநாள் வேலை பார்க்க மாட்டார்கள் அவர்களுடைய சிந்தனை எல்லாம் சொந்தத்தொழில் செய்வது பற்றியே இருக்கும். தொழிலும் தொடங்குவார்கள். ஆனால், அவர்கள் கூட, தன் சுய ஜாதகப்படி தனக்கு ஒத்து வருகின்ற தொழிலை செய்யும் போதுதான் அந்தத் தொழிலில் வெற்றியும் மேன்மையும் அடைகிறார்கள்.

அதே போல, குலத்தொழில் என்று சொல்வதற்கு எந்த ஆதாரமும் இல்லை் தந்தையின் குலத்தொழிலை மகன் செய்வான் என்பதற்கு எந்த உத்தரவாதமும் ஜாதகரீதியாக இல்லை.

ஜாதகத்தை ஆராய்ந்து, நேரம், காலம், கிரகநிலை அனைத்தையும் கணித்து, அதோடு அதிர்ஷ்டகரமான பெயர் எண் வைத்து, செய்யப்படும் தொழில்கள் நிச்சயம் வெற்றி பெறும்

அடுத்த இதழில் திருமணத் தேதிகள் பற்றிய சூட்சுமத்தைப் பார்க்கலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# இராஜ யோகம் தரும் சிவன் கோவில்



வாழ்வில் ஒரு சிலருக்குத்தான் இராஜயோகம் கிடைக்கும். அந்த ஒரு சிலர்களில் நாமாக இருந்தால் எப்படி இருக்கும்? இந்த வினாவிற்கு விடை எழுத சிவபெருமானை தவிர வேறு யாரால் முடியும்? இராஜ யோகம் தரும் ஒரு சிவன் கோயில் ஒன்று இருக்கிறது என்பது நம்மில் யாருக்கு தெரியும்? பதிகங்கள் பெற்ற ஒரு பழம் பெரும் சிவாலயம் தொன்மையான அந்த சிவாலயத்தை தரிசித்தாலே போதும் எந்த வேண்டுதலாக இருந்தாலும் உடனே நிறைவேறும் அற்புதம்! ஆச்சிரியமாக உள்ளதா? அதுதான் உண்மை. தேவாரத் திரு முறைகள் சொல்லும் அதி அற்புத உயரிய செய்தி!

சீர்காழியிலிருந்து 10கிலோ மீட்டர் தொலைவில் இத்திருத்தலம் அமைந்து உள்ளது. திருக்கோயிலின் பெயர் திருநாங்கூர் அருள் மிகு இராஜ மாதங்கி உடனுறை அருள்மிகு மதங்கீஸ்வரர் திருக்கோயில். மயிலாடுதுறையிலிருந்து திருநாங்கூர் திருத்தலத்திற்கு பேருந்து வசதி உண்டு.





தல இறைவன் - ஸ்ரீ மதங்கீஸ்வரர்
தல இறைவி - ஸ்ரீ இராஜ மாதங்கி அம்பிகை
தல விருட்சம் - வன்னி மரம்

## தல சிறப்பு

ஒரே பீடத்தில் அமைந்துள்ள இரு நந்திகள் இரு வேறு திசையை நோக்கி வீற்றிருக்கின்றன. ஒன்று திருவெண்காட்டை நோக்கியும், மற்றொன்று அருள்மிகு மதங்கீஸ்வரர் சந்நிதியை நோக்கியும் அருட் காட்சி அளிக்கின்றன.

பிரதி வருடந்தோறும் 12சிவ மூர்த்திகளும் அம்பிகையுடன் 12ரிஷப வாகனங்களில் எழுந்தருளி ஸ்ரீ மதங்க மகரிஷிக்கு திருக்கல்யாண காட்சி தந்த வைபவம் இனிதே நடைபெறுகிறது.

## கூடுதல் தகவல்

இத்திருத்தல இறைவனையும், இறைவியையும் மனமுருக வழியட்டால் திருமணத்தடை விலகும். குழந்தை பாக்கியம் ஏற்படும் பட்டம், பதவி, புகழ், நீண்ட ஆயுள் மற்றும் உயரிய இராஜயோகம் கிடைக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை யாகும்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# வாழைப்பூகலச பூஜை

30 வயதை தாண்டியும் கல்யாணம் தாமதப்படும் அல்லது தடைபட்டு வரும் ஜாதகர்களுக்கு ஒரு எளிய பரிகாரம்.

ஒரு செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமை காலை 07 மணி முதல் 08 மணிக்குள் செய்யலாம். வீட்டின் மத்திய பாகத்தில் அல்லது பூஜை அறை பெரிதாக இருந்தால் அந்த அறையிலாவது செய்யலாம். காலையில் பரிகாரம்  செய்யப்படும் பெண் அல்லது ஆண் குளிதது பூஜைக்கு தயார்படுத்திக் கொள்ளவேண்டும். பூஜை செய்யும் அறையில் பெரியவர்கள் சாப்பிடும் அளவிலான ஒரு தலை வாழை இலை போட்டு அதில் கால் படி பச்சரிசியை  பரத்தி வைக்கவேண்டும். அதன் மேல் வாய் சிறியதான நடுத்தர அளவிலான மண் பானை ஒனறை சுத்தமாக கழுவி அதில் அரை பாகம் தண்ணீர் ஊற்றி பச்சரிசி மேல் வைக்க வேண்டும்.



மேற்படி பானை வாயில் ஒரு முழு வாழைப்பூ ஒன்றை அதன் இதழ்கள் பிய்ந்துவிடாதபடி பிரித்து அந்த பானையின் மீது உள்ளே விழுந்துவிடாதபடி வைக்கவேண்டும். தற்போது  இது ஒரு கலசம் போல இருக்கும். பிறகு ஒரு முழ அளவுள்ள 27 தென்னை ஈர்க்கங்குச்சிகளைஅதன் தலையில் பஞ்சு அல்லது மெல்லீஸ் துணியை கொண்டு திரியை போல சுற்றி தயார் செய்து வைத்துக்கொள்ளவும்.

ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் நல்ல எண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், வேப்பெண்ணெய், நெய் ஆகிய ஐந்து எண்ணெய்களையும் சம அளவு கலந்து எடுத்து, பிறகு அந்த 27 குச்சிகளையும் இந்த ஐந்தெண்ணெயில் நனைத்து கலசத்தின்மீதுள்ள வாழைப்பூவில் குத்திவிட வேண்டும்.

பரிகாரம்  செய்யும் பெண்ணைவிட்டு அந்த 27 திரியையும் மெழுகுவர்த்தியின் உதவியால் கொழுத்தச் சொல்லவும்.

திரி எரிந்து கொண்டிருக்கும்போதே வாழைப்பழம், பூ போன்ற வஸ்துக்களைவைத்து தேங்காய் உடைத்து வைத்து அந்தப்  பெண்ணை கும்பத்திற்கு நமஸ்காரம்  செய்யச்சொல்லி  நமஸ்காரம் முடிந்தவுடன் அந்த கலசத்தை ஒன்பது முறை அப்பிரதட்சனமாக அதாவது  Anti-Clock wise ஆக சுற்றச்சொல்ல வேண்டும்.

இவைகள் முடிந்தவுடன் பானையில் உள்ள தண்ணீரை கால் படாத. இடத்தில் கொட்டிவிட்டு, அந்த

பானை, அரசி, தேங்காய், வாழைப்பழம் ஆகியவற்றை ஒரு பழைய துணியிலாவது சாக்கிலாவது கட்டி, அன்று மாலைக்குள் சமுத்திரத்திலோ, ஆற்றிலோ, குளத்திலோ எறிந்து விடவேண்டும். இவற்றை யாரும் சாப்பிடக்கூடாது. மற்றவர்களின் கிணத்தில் போட்டு பாவத்தை சம்பாதிக்ககூடாது.

சமுத்திரமோ, ஆறோ, குளமோ இல்லாத ஊராக இருந்தால் மண்ணைத் தோண்டி புதைத்துவிடவேண்டும்.

இந்த பரிகாரத்தை ஒருமுறைதான் செய்யவேண்டும். இரண்டு மூன்று முறை என்று செய்யக்கூடாது.

பரிகாரம் செய்யும் பெண் கலசத்தை ஒன்பது முறை சுற்றும்போது வீட்டில் உள்ளவர்களும் சுற்றலாம். தவறில்லை.

இது முதிர் கன்னிகளின் கவலை தீர்க்க பொது நலன் கருதி செய்யப்பட்ட பதிவாகும். முயற்சி செய்து பயணடையுங்கள்




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும்
சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்
www.priestservices.com போன்: 95004 95008

# மந்திர மகிமை

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய சௌந்தர்ய லஹறியின் பாடல்கள் அனைத்தும் மந்திரங்களே என்பதை அறிந்தோம்.
அந்தவகையில், துன்பம் நீக்கும் மந்திரங்களில் "பயம், வறுமை நீங்கி சொத்துகள் பெற" உதவுகின்ற மந்திரத்தை இப்போது அறிந்துகொள்ளலாம்.

மந்திரம் :

த்வ தன்ய: பாணிப்ய்யா மபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடித வராபீத்யபிநயா
பயாத் த்ராதூம் பலமபி ச வாஞ்சாலை மதிகம்
சரண்யே லோகானும் தவஹி சரணாவேவ நிபுணௌ

இதன்பொருள் என்னவென்றால்..."தாயே நீ மற்ற தெய்வங்களைப்போல் உன் கரங்களில் அபய, வரத முத்திரைகளைக் காட்டுவதில்லை, ஏனெனில், பக்தரை பயங்களிலிருந்து காக்கவும் வேண்டிய பலன்களை அளிக்கவும் உன்னுடைய திருவடிகளே சக்தியை அருள்வதாய் அமைந்துள்ளன.



இந்த மந்திரத்தின் பயனைப்பெற இதனை பிரயோகம் செய்யும் முறையினை இப்போது பார்க்கலாம்.

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை வெள்ளி அல்லது தங்கத் தகட்டில் வரைந்து பூஜையில் வைக்க வேண்டும்.

தினமும் 1000 முறை வீதம் 40அல்லது 16நாட்கள் கிழங்கு அல்லது வடகிழக்கு முகமாக அமர்ந்து ஜபிக்க வேண்டும்.

குங்குமம் கொண்டு லலிதா சகஸ்ஹரநாம அர்ச்சனை செய்து வெண்பொங்கல், எலுமிச்சை சாதம், கரும்புத்துண்டுகள், பால் இவற்றைக்கொண்டு நைவேத்யம் செய்ய வேண்டும்.

இந்த மந்திரப்பிரயோகம் பயம், வறுமை இவற்றை நீங்கி பெரும் செல்வத்தை அடைய நிச்சயம் உதவும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# மேஷம்



- அனைவரும்  உங்களுக்கு ஆதரவாக செயல்படுவார்கள்.
- பணியில் நீங்கள் திட்டமிட்டபடி செயல்பட்டு வெற்றி காண்பீர்கள்.
- பணி நிமித்தமாக தொலை தூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.
- செயல்கள் யாவும் பிறரை ஊக்குவிக்கும் வகையில் இருக்கும்.
- ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.
- கல்வியைப் பொறுத்தவரை மேஷ ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் மிகச் சிறந்த மாதமாக இருக்கும்.
- நீங்கள் விரும்பும் வகையில் கல்வியில் வெற்றி காண்பீர்கள்.
- விரும்பும் வகையில் திருமண வாழ்வை பெற்றோர் மற்றும் மூத்தவர்களின் ஆதரவுடன் அமைத்துக் கொள்ளவும் இந்த மாதம் உகந்ததாக இருக்கும்.
- சக மாணவர்களின் பாடம் சம்பந்தமான சந்தேகங்களை தீர்த்து வைப்பீர்கள்.
- பணிகளுக்கான பாராட்டுக்களைப் பெறுவீர்கள்
- பண வரவும் அதிகம் இருக்கும்.
- உங்கள் பொருளாதாரத் தேவைகளை நீங்கள் சிறப்பாக நிறைவேற்றிக் கொள்வீர்கள்.
- எதிர்கால நலன் கருதி புதிய முதலீடுகளையும் மேற்கொள்வீர்கள்.
- உறவினர்களின் வேண்டுகோள் அல்லது தேவை கருதி அவர்களுக்கு பண உதவி செய்வீர்கள்.
- நண்பர்களிடம் இருந்து வர வேண்டிய தொகையை வசூலிப்பீர்கள்.
- ஆன்மீக காரியங்களுக்காக பணத்தை  செலவு செய்வீர்கள்.

வேலையில் வெற்றி பெற : கணபதி பூஜை

திருமண உறவில் நல்லிணக்கம் காண : சுக்கிரன் பூஜை

# ரிஷபம்



- நீங்கள் வாழ்க்கையை இனிமையாக அனுபவிக்க, உங்களுக்கு வாய்ப்பு கிட்டும் மாதமாக அமையும்.
  - பிறருடன் பேசும் போது வார்த்தைகளில் கவனம் தேவை.
  - நீங்கள் மன அமைதி வேண்டியும் புத்துணர்ச்சி பெறவும் புனித யாத்திரை மேற்கொள்வீர்கள்.
- பொருளாதார நிலையில் முன்னேற்றம் சாதாரணமாக இருக்கும்.
- உங்கள் செயல் திறன் மூலம் நீங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள்.
- உங்கள் மனதிற்கு பிரியமானவர்களிடம் உங்கள் மனப் போக்கை காட்டாமல் கவனமுடன் நடந்து கொள்ளுங்கள்.
- உங்கள் சுய முன்னேற்றம் நீங்கள் வாழ்வில் ஸ்திரமான நிலை காண உங்களுக்கு உதவும்.
- உங்கள் நிதிநிலையில் சிறந்த முன்னேற்றம் இருக்கும்.
- நீங்கள் கொடுத்த கடன்களை வசூலிப்பீர்கள்.
- உறவினர்கள் பணத்தை கடனாகக் கேட்கும் போது உங்கள் கௌரவம் கருதி கடன் வழங்குவதை தவிர்ப்பது நல்லது.
- புதிய தொழில் ஒப்பந்தங்கள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.
- நீங்கள் கூட்டுத் தொழில் புரிபவராக இருந்தால் உங்கள் கூட்டாளி நீங்கள் அளிக்கும் வேலைகளை செய்வதில் தாமதம் செய்வார்கள்.
- நீங்கள் வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் உங்கள் மனதிற்கு புத்துணர்ச்சி கிடைக்க வாய்ப்பு இருக்கும்.
- நீண்ட தூர பயணம் மேற்கொண்டால், நீங்கள் சுயமாக ஓட்டாமல் வாகன ஓட்டியை நியமித்துக் கொண்டு பயணம் மேற்கொள்வது நல்லது.

தன்னம்பிக்கையுடன் தேர்வுகளை மேற்கொள்வீர்கள்.

அதில் வெற்றியும் காண்பீர்கள்.

சில மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்கள் மூலம் உதவித்தொகை கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

கல்வியில் சிறந்து விளங்க : சரஸ்வதி பூஜை

திருமண உறவில் நல்லிணக்கம் காண : செவ்வாய் பூஜை

# மிதுனம்




- அதிகப் பணிகள் காரணமாக ஓயாமல் உழைப்பு, உழைப்பு என்று இருப்பீர்கள்.
- முன்னேற்றத்தின் ஒரு படியாக சிலர் இந்த மாதம் அசையாச் சொத்துக்களை வாங்குவீர்கள்.
- அக்கம் பக்கத்தினர் ஆதரவாக இருப்பார்கள்.
- மன அமைதி வேண்டி புனிதத் தலங்களுக்கு யாத்திரை கூட சென்று வருவீர்கள்.
- உணவு முறையில் கவனமாக இருங்கள்.
- காதல் வெற்றி பெறக் காண்பீர்கள்
- வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.
- திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடை பெறும்.
- முதலீடுகள் மூலம் லாபம் பெறுவீர்கள்.
- சிலர் சுப நிகழ்ச்சிகள் மற்றும் விருந்து விசேஷங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.
- பணியிடத்தில் மேலதிகாரிகள் மற்றும் உடன் பணிபுரிபவர்களிடம் சமூகமான நல்லிணக்க உறவை மேற்கொள்ளுங்கள்.
- பணிகள் சவாலானதாக இருக்கும்.
- புதிய யுத்திகளையும் கையாண்டு வெற்றி பெறுவீர்கள்.
- இலக்குகளை அடைய விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டும்.
- ஒரு சிலருக்கு ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.
- ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.
- அஜீரணக்கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- முயற்சியின் மூலம் தேர்வுகளில் வெற்றி காண்பீர்கள்.
- மனம் லயித்து படிப்பதன் மூலம் கல்வியில் வெற்றி எளிதாகக் கிடைக்கும்.

திருமண உறவில் நல்லிணக்கம் காண : சுக்கிரன் பூஜை

நிதிநிலை மேம்பட : ராகு பூஜை

# கடகம்




- குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள்.
- இதன் காரணமாக அலுவலகத்திலும் சமூகத்திலும் நல்ல பெயரும் புகழும் பெறுவீர்கள்.
- சிறப்பாக திட்டங்களை வகுத்து செயல்படுவீர்கள்.
- சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்கும்.
- காதலை தக்க தருணம் பார்த்து வெளிப்படுத்துங்கள்.
- குடும்ப வாழ்வில் துணையுடன் ஒத்துப் போவதில் சில சிக்கல்கள் இருக்கும்
- வாழ்வை சரியான முறையில் அமைத்துக் கொள்ள உரிய வாய்ப்பினை அளிக்கும்.
- வரவை விட செலவுகள் அதிகம் இருக்க வாய்ப்புள்ளது.
- பண விஷயங்களில் திருப்தியான நிலை காணப்படாது.
- பணியில் வளர்ச்சியில் தாமதங்களும் தடைகளும் காணப்படும்.
- சக பணியாளர்களிடம் தேவையற்ற வாக்கு வாதங்களில் ஈடுபடாதீர்கள்.
- ஆக்கப்பூர்வமாக செயலாற்றுங்கள்.
- பணி நிமித்தமங்க சில எளிதான பயணங்களை மேற்கொள்வீர்கள்.
- புதிய திட்டங்களை வகுத்து செயல்படுவீர்கள். அதில் வெற்றியும் பாராட்டும் பெறுவீர்கள்
- ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- ஆரோக்கியம் மேம்பட உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.
- கல்வியில் விரும்பியதை அடைய கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- சமயோசித புத்தியும் நட்புணர்வும் இந்த மாதம் கை கொடுக்கும்.

வேலையில் வெற்றி காண : செவ்வாய் பூஜை

நிதிநிலை மேம்பட : சுக்கிரன் பூஜை

# சிம்மம்



- குடும்ப உறுப்பினர்களிடம் நல்லிணக்க உறவை தக்க வைத்துக் கொள்ள பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.
- குழந்தைகள் தங்கள் துறையில் சிறப்பாக செயலாற்றுவார்கள்.
  - அவர்கள் மூலம் மன அமைதி கிட்டும்.
  - பருவ கால மாறுபாடு காரணமாக சிலருக்கு சிறிய உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.
- ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள்.
- சிலரின் காதல் உறவுகள் திருமண பந்தமாக மாறும்.
- திருமணம் நடக்கும்.
- எல்லா விஷயங்களிலும் பொறுமை காக்க வேண்டும்.
- விரும்பியது போல வங்கியின் சேமிப்பு இருப்பு நிலை உயரும்.
- பண விஷயங்களில் சரியான வகையில் திட்டமிடுவதன் மூலம் பொருளாதார வெற்றி காண இயலும்.
- பணிகளை சரியான நேரத்தில் முடிப்பதில் சில கால தாமதங்களை சந்திப்பீர்கள்.
- சக பணியாளர்களுடன் வாக்குவாதம் செய்வதை தவிருங்கள்.
- அவர்களுடன் சுமூக உறவை மேற்கொள்ளுங்கள்.
- வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதுமனதில் பதட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- பணிகள் அதிகம் இருந்தாலும் உடன் பணி புரிபவர்கள் உதவி மூலம் அந்தப் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலும்.
- மனதில் தேவையிலாத பதட்டம் ஏற்படும்.
- இந்த பருவ காலத்தில் விளையும் பழங்களை உட்கொள்ளுங்கள்.
- எளிதான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.
- சிறந்த ஆரோக்கியத்திற்கு முறையான ஓய்வும், தூக்கமும் அவசியம்.
- ஆசிரியர் நடத்தும் பாடங்களை ஊன்றி கவனித்துப் படியுங்கள்.
- சக மாணவர்களுடன் கலந்து பழகுங்கள்.
- படிப்பு நேரத்தில் தேவையற்ற பேச்சுக்களை தவிர்த்து தேவையானவற்றை மட்டும் பேசுங்கள்.

கல்வியில் சிறக்க : சரஸ்வதி பூஜை

ஆரோக்கியம் மேம்பட : ஸ்ரீ வைத்தியநாத பூஜை

# கன்னி



- அன்றாட வாழ்வில் சந்திக்கும் பிரச்சினைகளை எளிதாக சமாளிப்பீர்கள்.
- எடுக்கும் முடிவு எதுவாக இருந்தாலும் அதில் வெற்றி காண்பீர்கள்.
- உறவினர்களிடமும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.
- மதிப்பும் மரியாதையும் அடைவீர்கள்.
- செலவில் கவனம் தேவை.
- சில சமயம் மன அமைதியின்றி வருத்தத்தில் ஆழ்வீர்கள். எனவே தியானம், யோகா போன்ற பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் அமைதி காண முயலுங்கள்.
- உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- நல்ல முறையில் அவர்களுடன் பேசிப் பழகுவீர்கள்.
- பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும்.
- முதலீடுகளின் மூலம் கிடைக்கும் லாபம் திருப்தி அளிக்கும் வகையில் இருக்கும்.
- குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி ஒன்றிற்காக பணம் செலவு செய்ய நேரும்.
- பல பணிகளையும் குறித்த நேரத்தில் மிக எளிதாக முடித்து விடுவீர்கள்.
- வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்வீர்கள்.
- சுயமாக செயல்படுவதன் மூலம் எதிர்பார்க்கும் வளர்ச்சியைக் காண்பீர்கள்.
- சிறப்பாக செயலாற்றி நல்ல பலன்களைக் காண்பீர்கள்.
- சிலர் பாராட்டும் புகழும் பெறுவீர்கள்.
- தொழில் நிமித்தமாக வெளி நாடு செல்வதற்கான வாய்ப்பும் உள்ளது.
- துரித உணவுகளை தவிர்ப்பது நல்லது.
- யோகா, தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது.
- சக மாணவர்களுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வதன் மூலம் சிறந்த பலன்களைக் காண முடியும்.

கல்வியில் வெற்றி காண : சரஸ்வதி பூஜை

ஆரோக்கியமான வாழ்விற்கு : ஸ்ரீ வைத்திய நாத பூஜை

# துலாம்



- சில சமயங்களில் அன்றாட பணிகளில் கூட தன்னம்பிக்கை இழப்பீர்கள்
- பணிகளை முடிக்க கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- குடும்ப உறவினர்களிடம் பேசும் போது கவனமாகப் பேசுங்கள்.
- த்யானம் மற்றும் யோகா போன்றவற்றை பயிற்சி செய்வதன் மூலம் கவனத் திறன் அதிகரிக்கும்.
- உறவுகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.
- உணமையான நோக்கத்தை துணை புரிந்து கொள்ள மாட்டார்.
- பொறுமையுடன் இருக்க வேண்டும்.
- திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அதனைச் சிறிதுகாலத்திற்கு தள்ளிப் போடுங்கள்.
- பயணம் மற்றும் ஆரோக்கியச் செலவுகள் அதிகரிக்கும்.
- எதிர் கால நலன் கருதி சேமிப்பில் கவனம் செலுத்துங்கள்.
- வேலையில் சில கடுமையான தருணங்களை சந்திக்க நேரும்.
- பணியிடத்தில் யாரையும் கண்மூடித்தனமாக நம்பாதீர்கள்.
- இது வருத்தத்தையும் பதட்டத்தையும் அளிக்கலாம்.
- நடைமுறையை அனுசரித்து சரியான முடிவுகளை எடுக்க அனுகூலமாக இருக்கும்.
- நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.
- அதீத தன்னம்பிக்கை, நம்பிக்கையின்மை என்ற இரு துருவத்திலும் மன ஓட்டத்தை செலுத்தாமல் நடுநிலையாக அணுகுங்கள்.
- தொழில் வாய்ப்புகளை தேர்ந்தெடுக்கும் போது கவனமுடன் செயல்படுங்கள்.
- ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் தேக ஆரோக்கியம் குறித்த கவலை வேண்டாம்.
- மனப் பதட்டம் கொள்ளாமல் இருக்க தினசரி தியானம் மற்றும் யோகா போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். அதன் மூலம்மன அமைதி கிட்டும்.
- சில சிறிய சிக்கல்கள் இருந்தாலும் அவற்றை எளிதில் சமாளித்து விடுவீர்கள்.
- அனாவசியப்பேச்சை குறைத்துக் கொள்ளுங்கள்.

ஆரோக்கியமான வாழ்விற்கு : ஸ்ரீ வைத்திய நாத பூஜை

வேலையில் முன்னேற்றம் காண : சந்திரன் பூஜை

# விருச்சிகம்




- தைரியமாகவும், விடா முயற்சியுடனும் செயல்படுவீர்கள்.
- ஊக வணிகம் மூலமாக நல்ல பலன்களைக் கான்பேஏர்கள்.
- சமூகத்தில் கௌரவம் உயரும்.
- சமூக சேவை செய்வதில் அக்கறை காட்டுவீர்கள். அதன் மூலம் மனத் திருப்தி பெறுவீர்கள்.
- ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்வதில் அலட்சியம் காட்டுவீர்கள்
- இளம் வயதினருக்கு மனதில் காதல் அரும்பும். திருமணம் ஆகாதவர்களுக்கு தாமதம் மற்றும் தடை ஏதும் இன்றி திருமணம் நடக்கும். • நிதிநிலை ஆறுதல் அளிக்கும் வகையில் இருக்கும்.
- ஊக முதலீடுகளில் ஆர்வம் அதிகரிக்கும்.
- பயணங்கள் பலவும் மேற்கொள்வீர்கள். அதன் மூலம் கூடுதல் செலவினங்கள் அதிகரிக்கும்.
- பன்முகத் திறன் மற்றும் கடின உழைப்பு மூலம் பணியில்
- கிரக நிலைகள் சாதகமாக இருப்பதால் அலுவலகத்தில் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்திலும் நல்ல பலன்களைக் காண்பீர்கள்.
- தொழிலில் சில சவால்களையும் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். அதன் மூலம் முன்னேற்றம் மேலும் ஒரு படி உயரும்.
- முறையான தகவல் பரிமாற்றம் மற்றும் தொடர்பு மூலம் சிறந்த பலன்களைக் காண இயலும்.
- சாதாரண பலவீனம் மற்றும் களைப்பிற்கு ஆளாவீர்கள்.
- இரத்தக் குறைபாடு ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுங்கள்.
- ஹீமோகுளோபின் குறைவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. • மாணவர்களுக்கு சாதகமாக இருக்கும்.
- கிரகிக்கும் திறன் கூடுதலாக இருக்கும். • தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறஅனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்.
- வெற்றி வந்து சேரும்

ஆரோக்கியம் மேம்பட : ஸ்ரீ வைத்தியநாத பூஜை

கல்வியில் சிறந்து விளங்க : சரஸ்வதி பூஜை

# தனுசு



- மேற்கொள்ளும் செயல்கள் யாவும் நல்ல பலன்களை அளிக்கும்.
- பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும்.
- மதிப்பும் மரியாதையும் பெறுவீர்கள்.
- குழந்தைகளின் வளர்ச்சி மகிழ்ச்சி அளிக்கும்.
- சொத்துக்களை வாங்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அதனை சிறிது காலத்திற்கு தள்ளிப் போடுங்கள். இப்பொழுது எடுக்கும் முயற்சிகளில் எதிர் பார்க்கும் பலன் இழுபறியாக இருக்கும்.
- சீரிய முயற்சிகள் நல்ல வாழ்க்கைத் துணையைப் பெற்றுத் தரும்.
- பொருளாதார முன்னேற்றம் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.
- முதலீடுகளின் மூலம் லாபம் காணும் மாதமாக இருக்கும்.
- வேலையில் காணும் முன்னேற்றம் வளர்ச்சிக்கு படிக்கட்டாக அமையும்.
- நேர்மை நல்ல பெயரையும் அங்கீகாரத்தையும் பெற்றுத் தரும். கூடுதல் பொறுப்புகளை அலுவலகத்தில் அளிப்பார்கள்.
- வியாபாரம் செய்யும் தனுசு ராசி அன்பர்களுக்கு சிறந்த வாய்ப்புகள் காத்திருக்கின்றது.
- சக கூட்டாளிகள் தகுந்த ஒத்துழைப்பை அளிப்பார்கள்.
- வாடிக்கையாளர்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொள்வார்கள்.
- முன்னேற்றத்தை நோக்கிச் செல்வீர்கள்.
- சரியான உணவு முறை, தியானம் மற்றும் முறையான ஓயுவு மூலம் ஆரோக்கியம் மேம்படும்.
- பெற்றோர்களிடம் பணிவாக நடந்து கொள்ளுங்கள்.

ஆரோக்கியமான வாழ்விற்கு : வைத்தியநாத பூஜை

கல்வியில் சிறந்து விளங்க : சரஸ்வதி பூஜை

# மகரம்



- குடும்ப உறுப்பினர்களிடம் கலந்து பழகுவது, அவர்களுடன் பேசி கருத்துக்களை பகிர்ந்து கொள்வது போன்ற விஷயங்களில் ஆர்வம் குறையும்.
- உடன் பிறப்புக்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். இது வருத்தத்தை அளிக்கும்.
- பணியிடத்தில் மேலதிகாரிகளுடன் கவனமாக நடந்து கொள்ளுங்கள்.
- கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான அறிகுறி இருப்பதால் அன்பை/ காதலை வெளிப்படுத்தாமல் இருப்பது நல்லது.
- கருத்து வேறுபாடு காரணமாக காதல் உறவை முறித்துக் கொள்வது போன்ற அவசர முடிவை எடுக்காதீர்கள்.
- நிதிநிலையில் காணப்படும் ஏற்ற இறக்கம் கவலை அளிக்கும்.
- கையில் இருக்கும் பணத்தைக் கொண்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயலுங்கள்.
- சொத்துக்களை விற்று வரும் தொகை கடனை அடைத்து அதிலிருந்து வெளி வருவதற்கு போதுமானதாக இருக்கும். வேலை புரியும் மகர ராசி அன்பர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் பணிகளை மிகவும் பொறுமையுடன் மேற்கொண்டு முடிக்க வேண்டும்.
- தொடர்ந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றுங்கள்.
- கடந்த காலத்தில் தொழில் அல்லது வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த தவறுகளை அடையாளம் கண்டு திருத்திக் கொள்ள முயல வேண்டும்.
- கூட்டாளியை கண்மூடித் தனமாக நம்பி செயல்படாமல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.
- பணியிடத்தில் அலட்சியம் சில பிரச்சனைகளை ஏற்படுத்தும்.
- கூடுதல் பணிகள் காரணமாக வேலை நேரம் அதிகரிக்கும்.
- சரியற்ற உணவு முறை, மற்றும் மருந்து உட்கொள்ளாமை போன்றவற்றின் காரணமாக உடல் அசௌகரியத்தை சந்திக்க நேரும்.
- தியானம், யோகா போன்றவற்றை தினமும் தவறாமல் பின்பற்றி ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.
- எதிர்பார்ப்புகள் நிறைவேறுவது கடினமாக இருக்கும்.
- படிப்பு உட்பட அனைத்து தேவைகளுக்கும் பெற்றோரின் வழிகாட்டுதல்களை பின்பற்றுங்கள்

வேலையில் முன்னேற்றம் காண : அங்காரக பூஜை

நிதிநிலை மேம்பட : குரு பூஜை

# கும்பம்




- அனைத்து செயல்களிலும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.
- பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.
- மற்றவர்களை தவறாகப் புரிந்து கொள்ளாமல் பழக முற்படுங்கள்
- வாழ்க்கைத் துணையிடம் சில ஏமாற்றங்களை சந்திப்பீர்கள்.
- மனப் பட்டத்திற்கு ஆளாக நேரிடலாம்.
- சூழ்நிலைய கவனமாகக் கையாளுங்கள்.
- பொறுமையே தாரக மந்திரம் என்று செயல்பட வேண்டும்
- காதல் வாழ்க்கை சீராக செல்லும் என்றாலும் துணையின் தேவையற்ற பேச்சுக்கள் வருத்தத்தை அளிக்கும்.
- பணப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உண்டு.
- தேவைகளை சமாளிக்க பணத்தை புரட்டுவதில் சில சிரமங்களைச் சந்திப்பீர்கள்.
- பணி செய்யும் கும்ப ராசி அன்பர்களுக்கு ஓரளவு சாதகமாக இருக்கும்.
- சக பணியாளர்கள் தங்களின் ஒத்துழைப்பை அளிப்பார்கள்.
- தொழில் மூலம் ஓரளவு லாபம் கிடக்கும்.
- இது மன வருத்தத்தை அளிக்கும். கடினமாக உழைப்பீர்கள். என்றாலும் அதற்குரிய பலன்கள் கிடைப்பது கடினமாக இருக்கும்.
- புதிய தொழில் துவங்க அல்லது இருக்கும் தொழிலை விரிவாக்குவதற்கு எது ஏற்ற தருணம் இல்லை.
- முயற்சிக்கு ஏற்ற பலன் நிர்வாகத்திடம் இருந்து கிடைக்காது
- மனதை திடமாக வைத்துக் கொண்டு உற்சாகம் இழக்காமல் காத்துக் கொள்ளுங்கள். பணியிடத்தில் பிறரிடம் எதிர்மறை மனப் போக்கை காட்டாதீர்கள்.
- ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.
- தியானம், யோகா போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் ஆற்றல் கூடும். அமைதி கிட்டும்.
- அதீத நம்பிக்கை அல்லது அலட்சியப் போக்கு வெற்றிக்கு தடையாக இருக்கும் என்பதால் அவற்றை தவிர்க்க வேண்டும்.

கல்வியில் சிறந்து விளங்க: சரஸ்வதி பூஜை

ஆரோக்கியமான வாழ்விற்கு : வைத்தியநாத பூஜை

# மீனம்



- விருப்பங்கள் யாவும் நிறைவேறும்.
- மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வீர்கள்.
- குடும்பத்துடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.
- கலைஞர்கள் மற்றும் வியாபாரிகள் அரசாங்கம் மூலம் ஆதாயம் காண்பார்கள்.
- ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.
- குடும்பத்தினரிடம் சரியான தருணம் பார்த்து சாதகமான பதில் கிடைக்கும் வகையில் காதலை வெளிப்படுத்துங்கள்.
- பண வரவும் பணப் புழக்கமும் மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு தேவைப்படும் பண உதவியைச் செய்வீர்கள்.
- ஊக வணிகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.
- பணி புரியும் மீன ராசி அன்பர்களின் எதிர்பார்ப்புகள் யாவும் நிறைவேறும். முன்னேற்றங்கள் ஏற்படும்.
- சக பணியாளர்களிடம் காட்டும் நட்புணர்வும், பழகும் தன்மையும் பல நன்மைகளை பெற்றுத் தரும்.
- பெயரும் புகழும் பெறுவீர்கள்.
- வாடிக்கையாளர்களின் ஆதரவும் தொழில் மூலம் லாபமும் காண்பீர்கள்.
- ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.
- யோகா, தியானம் போன்ற பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்கலாம்.
- சக மாணவர்களுடன் கூட்டாக படித்து அறிந்தவற்றை அவர்களுக்கு விளக்கி அறிவைப் பகிர்ந்து கொள்வர்கள்.

வேலையில் முன்னேற்றம் காண : குரு பூஜை

நிதிநிலை மேம்பட : அங்காரக பூஜை

திருமண உறவில் நல்லிணக்கம் காண : சந்திரன் பூஜை

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்